பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

18 12 2024 **WEDNESDAY** **7.15 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அரசுமுறைப்பயணமாக பிரதமர் திரு நரேந்திர மோடி வரும் 21-ஆம் தேதி குவைத் செல்ல உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது

2. பாரத ரத்னா அம்பேத்கர் குறித்து மாநிலங்களவையில் தாம் தெரிவித்த கருத்துக்களை காங்கிரஸ் கட்சி திரித்து கூறி வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. ஏழை மற்றும் சிறுபான்மையின மக்களின் வாழ்வை மேம்படுத்தும் வகையில் கடந்த பத்தாண்டுகளில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4. இந்தியா – சீனா சிறப்பு பிரதிநிதிகள் இடையிலான பேச்சுக்கள் இன்று பெய்ஜிங்கில் நடைபெற்றன.

5. மும்பையில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Sahaja Yamalapalli** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*<u>-- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<<<<>>>>>

அரசுமுறைப்பயணமாக பிரதமர் திரு நரேந்திர மோடி வரும் 21 மற்றும் 22-ஆம் தேதிகளில் குவைத் செல்ல உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

குவைத் அரசர் திரு **'Sheikh Meshal Al Ahmad Al Jaber Al Sabah '** அழைப்பின்பேரில், பிரதமர் அங்கு செல்வதாக மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பயணத்தின்போது இந்தியா – குவைத் இடையிலான இருதரப்பு உறவை மேம்படுத்தும் வகையிலான பேச்சுக்களில் பிரதமர் ஈடுபட இருப்பதாகவும், அதனைத்தொடர்ந்து அங்கு வாழும் இந்தியர்களுடன் அவர் உரையாட இருப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

43 ஆண்டுகளுக்கு பிறகுஇந்திய பிரதமர் ஒருவர் குவைத் நாட்டுக்கு பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும்.

<<<<<<<>>>>>

நாட்டுக்காக சேவையாற்றியவர்களை நினைவுகூறும் வகையில், அவர்களது பெயர்கள் அந்தமான் நிகோபாரில் உள்ள தீவுகளுக்கு சூட்டப்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்துடன் இணைந்திருக்கும் நாடே தொடர்ந்து வளர்ச்சியை பெறும் என்று கூறியுள்ளார்.

நாட்டின் விடுதலைக்காக பாடுபட்டவர்களையும், சிறப்பாக சேவையாற்றிய ஆளுமைகளையும் கொண்டாடும் முயற்சியின் ஒரு பகுதியாக இது அமைந்துள்ளதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>

பாரத ரத்னா அம்பேத்கர் குறித்து மாநிலங்களவையில் தாம் தெரிவித்த கருத்துக்களை காங்கிரஸ் கட்சி திரித்து கூறி வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று மாலை செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆளுங்கட்சியினர் கூறும் கருத்துக்களை திரித்து தேவையற்ற சலசலப்புகளை காங்கிரஸ் கட்சி ஏற்படுத்தி வருவதாக கூறினார்.

அம்பேத்கருக்கும், அரசியலமைப்புக்கும், இடஒதுக்கீட்டுக்கும் எதிராக அக்கட்சி செயல்பட்டதாக அவர் குற்றம் சாட்டினார்.

அரசியலமைப்புக்குழுவின் பணிகள் முடிவடைந்த பிறகு நடந்த தேர்தல்களில் அவரை தோற்கடிக்க காங்கிரஸ் கட்சி முயற்சித்ததாக அவர் தெரிவித்தார்.

அக்கட்சி ஆட்சியில் இருந்தபோது பாபா சாஹேப் அம்பேத்கரை போற்றும் வகையில் நினைவுச்சின்னங்கள் எதையும் அமைக்கவில்லை என்றும் பிஜேபி ஆட்சியின்போதே அதுபோன்ற முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டார்.

அம்பேத்கரின் கொள்கைகளை பிஜேபி பின்பற்றி வருவதாகவும், இடஒதுக்கீட்டை வலுப்படுத்தும் நடவடிக்கைகளில் தமது கட்சி செயலாற்றி வருவதாகவும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் இன்று நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டன.

டாக்டர் அம்பேத்கர் குறித்து, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்களவையில் இன்று எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன.

இதையடுத்து, பிற்பகல் இரண்டு மணிவரை அவை ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியபோது பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஒத்திவைப்பு தீர்மானத்திற்கு எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்தபோது, அவை அலுவலர் அதற்கு அனுமதி மறுத்தார்.

அதனைத்தொடர்ந்து, எதிர்க்கட்சியினர் அமளியில் ஈடுபட்டதால், அவை நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும், திரு அமித் ஷா-வுக்கு எதிராக கோஷமிட்டு எதிர்க்கட்சியினர் அமளியில் ஈடுபட்டதையடுத்து, அவை நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

<<<<<<<>>>>>

காவல்துறையை நவீன மயமாக்கும் திட்டத்திற்கு நான்காயிரத்து 846 கோடி ரூபாய் வழங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளதாக மத்திய உள்துறை இணையமைச்சர் திரு நித்யானந்த ராய் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு அவர் அளித்துள்ள பதிலில், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் நவீன தொழில்நுட்பம், ஆயுதங்கள், தகவல் தொடர்பு சாதனங்களுடன் காவல்நிலையங்களை மேம்படுத்தும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>

நடப்பு நிதியாண்டில் கரும்பு கொள்முதல் செய்யப்பட்ட விவசாயிகளுக்கு அளிக்க வேண்டிய 11 ஆயிரத்து 146 கோடி ரூபாயில் இதுவரை எட்டாயிரத்து 126 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருப்பதாக மத்திய உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

மக்களவையில் இன்று எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் இதனை தெரிவித்துள்ள அவர், கடந்த நிதியாண்டில் கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய தொகையில் 99 சதவீதம் வழங்கப்பட்டுள்ளதாகவும், 2022-23-ஆம் நிதியாண்டில் 99 புள்ளி ஒன்பது சதவீத நிலுவைத்தொகை விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>

மேற்காசியாவில் நிலவும் சூழல் குறித்து, வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர், இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் திரு **Gideon Saar**-வுடன், இன்று தொலைபேசி வாயிலாக உரையாடினார்.

இந்தியா - இஸ்ரேல் இடையேயான இருதரப்பு உறவு குறித்தும், அதனை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் இருவரும் விவாதித்ததாக தமது சமூக வலைதள பதிவில் திரு ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>

ஏழை மக்களின் வாழ்வை மேம்படுத்தும் வகையில் கடந்த பத்தாண்டுகளில் பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற சிறுபான்மையின கல்வி நிறுவனங்களுக்கான தேசிய ஆணையத்தின் நிறுவன தின விழாவில் அவர் பங்கேற்று பேசினார்.

அனைவருக்குமான வளர்ச்சி என்ற தாரக மந்திரத்தை அடிப்படையாக கொண்டு பிரதமரின் வீட்டுவசதி திட்டம், உஜ்வாலா திட்டம் உள்ளிட்டவை ஏழை மற்றும் சிறுபான்மையின மக்களின் நலனுக்காக செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

சிறுபான்மையின கல்வி நிறுவனங்கள், தேசிய கல்விக்கொள்கையை செயல்படுத்த வேண்டும் என்று திரு தர்மேந்திர பிரதான கேட்டுக்கொண்டார்.

<<<<<<<>>>>>

நடப்பு நிதியாண்டில் நேரடி வரிகள் மூலம், இதுவரை 19 லட்சத்து 21 ஆயிரம் கோடி ரூபாய் பெறப்பட்டுள்ளதாக வருமானவரித்துறை தெரிவித்துள்ளது.

கடந்த நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் இது 20 புள்ளி மூன்று இரண்டு சதவீதம் அதிகம் என்று அது கூறியுள்ளது.

மேலும், வருமானவரி செலுத்தியவர்கள் திரும்பப்பெறும் தொகையாக இதுவரை 3 லட்சத்து 38 ஆயிரம் கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாகவும் வருமானவரித்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

இந்தியா – சீனா இடையிலான இருதரப்பு உறவை மேம்படுத்தும் வகையில், சீன வெளியுறவு அமைச்சர் திரு **'Wang Yi**-வுடன் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல் இன்று பேச்சு நடத்தினார்.

பெய்ஜிங்கில் இன்று தொடங்கிய இருநாடுகளை சேர்ந்த சிறப்பு பிரதிநிதிகள் குழுவின் 23-ஆவது சுற்று பேச்சுவார்த்தையில் அவர் பங்கேற்று பேசினார்.

எல்லைப்பகுதியில் அமைதியை நிலைநாட்டுவது உட்பட பல்வேறு அம்சங்கள் குறித்து இப்பேச்சுவார்த்தையில் விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>

மகா கும்பமேளாவையொட்டி கட்டணமின்றி ரயில்களில் பயணிக்கலாம் என்று சமூக வலைதளங்களில் பரவிவரும் தகவல் தவறானது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய ரயில்வே அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இது அடிப்படை ஆதாரமற்ற தகவல் என்றும், பயணச்சீட்டு இல்லாமல் ரயிலில் பயணிப்பது தண்டனைக்குரிய குற்றம் என்றும் கூறப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் கும்பமேளாவில் கலந்துகொள்பவர்களுக்காக ரயில்வே பல்வேறு வசதிகளை செய்து வருவதாக அச்செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

அஸ்ஸாமின் துப்ரி மற்றும் கோக்ராஜ்கர் மாவட்டங்களில் தடை செய்யப்பட்ட தீவிரவாத இயக்கத்தை சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் எட்டு பேரை சிறப்பு அதிரடிப்படை கைது செய்துள்ளது.

இரண்டு வெவ்வேறு இடங்களில் இவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

**<<<<<<<>>>>>**

ராஜஸ்தானின் **Bikaner** –ல் உள்ள துப்பாக்கிச்சூடு பயிற்சி தளத்தில் இன்று நடைபெற்ற பயிற்சியின்போது நேரிட்ட விபத்தினால் இரண்டு ராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார்.

வெடிபொருட்களை நிரப்பும்போது இந்த விபத்து நேரிட்டதாகவும், காயமடைந்த வீரரை உடனடியாக மருத்துவமனைக்கு ஹெலிகாப்டர் மூலம் அனுப்பிவைத்ததாகவும் பாதுகாப்புப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**<<<<<<<>>>>>**

பங்களாதேஷில் உள்ள **Tongi Gazipur** பகுதியில் இன்று அதிகாலை இருதரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில், இரண்டு பேர் உயிரிழந்தனர். 100 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களை அருகில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதித்திருப்பதாகவும், இதுபோன்ற அசம்பாவிதங்கள் நிகழாத வண்ணம் அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அந்நாட்டு காவல்துறை தெரிவித்துள்ளது.

**<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

மும்பையில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Sahaja Yamalapalli** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 6-2, 6-2 என்ற செட் கணக்கில், ரஷ்யாவின் **Eva Garkusha**–வை வென்றார்.

-----------

உலக இளையோர் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Pranav Venkatesh** இரண்டு தங்கப்பதக்கங்களை வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

ஸ்லோவேனியாவில் நடைபெற்ற இப்போட்டியின் 18 வயதுக்கு உட்பட்டோருக்கான **Rapid** மற்றும் **Blitz** பிரிவுகளில் அவர் இப்பதக்கங்களை கைப்பற்றினார்.

**<<<<<<<END>>>>>**